©
GOVERNMENT OF TAMIL NADU
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 121A] சென்னை, செவ்வாய்க்கிழமை, மே 14, 2013
சித்திரை 31, விஜய, திருவள்ளுவர் ஆண்டு - 2044

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| **சட்டமுன்வடிவுகள் :** | |
| எண் 16/2013—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் .. | 2–3 |
| எண் 17/2013—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் .. | 5–6 |
| எண் 18/2013—தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி ( நான்காம் திருத்தச்) சட்டம் .. | 7–8 |

**2013–ஆம் ஆண்டு மே திங்கள் 14–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2013.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :–

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

**1.** (1) இந்தச் சட்டம் 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

13–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் 13–ஆம் பிரிவின், (5)–ஆம் உட்பிரிவில் ''ஒன்றேகால் விழுக்காடு வட்டியில்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இரண்டு விழுக்காடு வட்டிவீதத்தில்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 32/2006.

19–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்திற்குரிய 19–ஆம் பிரிவின், (15)–ஆம் உட்பிரிவில் ''ஒன்றேகால் விழுக்காடு வட்டிவீதத்தில்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இரண்டு விழுக்காடு வட்டிவீதத்தில்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

42–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**4.** முதன்மைச் சட்டத்திற்குரிய 42–ஆம் பிரிவின், (3) மற்றும் (4)–ஆம் உட்பிரிவுகளில் ''ஒன்றேகால் விழுக்காடு வட்டியில்'' என்கின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இரண்டு விழுக்காடு வட்டிவீதத்தில்'' என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

## நோக்கக்—காரண விளக்கவுரை

2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/ 2006) 13, 19 மற்றும் 42—ஆம் பிரிவுகளின்படி வரவேண்டிய வரி அல்லது தொகை ஏதேனும் இருப்பின் அதற்கு மாதம் ஒன்றிற்கு ஒன்றேகால் விழுக்காடு வீதத்தில் வட்டி செலுத்துதல் வேண்டும்.

**2.** குறைந்த வட்டிவீதத்தினை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, வணிகர்கள் அல்லது வரி செலுத்தக் கடமைப்பட்டுள்ள நபர்கள் பலமுறை தாமதமாக பணம் செலுத்துவதால், அரசுக்கு வரவேண்டிய வருவாய் பாதிக்கப்படுகிறது. இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் பொருட்டு அரசு மேற்சொன்ன மாதம் ஒன்றிற்கு ஒன்றேகால் விழுக்காடு வட்டிவீதம் என்பதை மாதம் ஒன்றிற்கு இரண்டு விழுக்காடு என்கின்ற வட்டிவீதத்தில் அதனை அதிகரித்திடுவதெனவும் மற்றும் அந்த நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தினை திருத்துவதெனவும் முடிவு செய்துள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013–ஆம் ஆண்டு மே திங்கள் 14–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க–காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2013.**

**2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :–

**1.** (1) இந்தச் சட்டம் 2013–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. **2.** (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப் பட்டியலில்,– முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) பகுதி B–யில், வரிசை எண் 56 மற்றும் அதன் தொடர்பான பதிவுகளுக்கு பின்பு, பின்வரும் வரிசை எண்ணும் மற்றும் பதிவுகளும் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"56–A. அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்.";

(2) பகுதி C–யில்,–

(i) 22–ஆம் வரிசை எண்ணில் உள்ள பதிவுகள் (i) என எண்ணிடப்படுதல் வேண்டும்;

(ii) அவ்வாறாக எண்ணிடப்பட்ட பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(ii) நோய் எதிர்ப்பான்கள் மற்றும் நோய் நுண்மக் கொல்லிகள்.".

**3.** முதன்மைச் சட்டத்திற்குரிய நான்காம் இணைப்புப் பட்டியலில் பகுதி B–யில்,– நான்காம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(1) வரிசை எண் 17–A மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) வரிசை எண் 38 மற்றும் அதன் தொடர்புடைய பதிவுகளுக்குப் பின்பு பின்வரும் வரிசை எண் மற்றும் பதிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

"38–A. வேளாண்மை/தோட்டக்கலை நோக்கங்களுக்காக பயன்படுத்தப் படுகின்ற பொருட்கள், அதாவது:–

(a) இரசாயன உரங்கள்;

(b) புழு பூச்சிக் கொல்லிகள், பூச்சிக் கொல்லிகள், கொறி விலங்கு கொல்லிகள், களைக்கொல்லிகள், பூஞ்சனக் கொல்லிகள், மூலிகைக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கலவைகள், தாவர வளர்ச்சி சீராக்கிகள், தாவர ஊட்டச் சத்துக்கள், நுண் ஊட்டச்சத்துக்கள் மற்றும் தாவர உரங்கள்";

## நோக்கக்—காரண விளக்கவுரை

சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு அதிக பயனளித்திடவும் விவசாயத்திற்கான உள்ளீட்டு செலவுகளை குறைத்திடவும், 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் நான்காம் இணைப்புப் பட்டியலின் பகுதி B—யில், வரிசை எண் 17—A-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கு அரசு வரி விலக்கு அளித்தது. எனினும், மேற்சொன்னவாறான பதிவு அவ்வாறு குறிப்பிடப்படவில்லையாதலால், வேளாண்மை நோக்கங்களுக்காக பொருட்கள் பயன்படுத்தப்படுகிறது என்ற பெயரில் ''நோய் நுண்மக் கொல்லிகள்'', ''நோய் எதிர்ப்பான்கள்'' மற்றும் ''அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்'' போன்ற அத்தகைய பொருட்கள் மீது வரி ஏய்ப்பு செய்யப்படுகிறது. வேளாண்மை நோக்கங்களுக்காக அப்பொருட்களின் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவில் இல்லாததாலும் வேளாண்மையல்லாத பிற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுவதே மேலோங்கி உள்ளதாலும், ''நோய் நுண்மக் கொல்லிகள்'', ''நோய் எதிர்ப்பான்கள்'' மற்றும் ''அனைத்து வகையான மற்றும் வடிவிலான ஜிப்சம்'' ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டுள்ள வரிவிலக்கினை திரும்ப பெறுவது எனவும், கூறப்பட்ட சட்டத்தின்படி அவைகளுக்கு வரிவிதிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. நான்காம் இணைப்புப் பட்டியலின் பகுதி B—யில், வரிசை எண் 17—A-யில் குறிப்பிடப்பட்டுள்ள ''கணைத் தடுப்பான்கள்'' வேளாண்மைக்கு எந்த வகையிலும் பயன்படாததால் அவற்றை விட்டுவிடுவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. அதற்கிணங்கியவாறு, மேற்சொன்ன நோக்கங்களுக்காக கூறப்பட்ட சட்டத்திற்குரிய இணைப்புப் பட்டியல்களை திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

2013—ஆம் ஆண்டு மே திங்கள் 14—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2013.**

**2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக்குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக :—

**1.** (1) இந்தச் சட்டம் 2013—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (நான்காம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது 2013—ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006. **2.** 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் முதலாம் இணைப்புப்பட்டியலில் பகுதி—C-யில் வரிசை எண் 13-A-ல் (ii) மற்றும் (iii)-ல் உள்ள பதிவுகள் நீக்கப்படுதல் வேண்டும். முதலாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

## நோக்கக்–காரண விளக்கவுரை

2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்திற்குரிய (தமிழ்நாடு சட்டம் 32/2006) முதலாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–C-யின்படி 14.5 விழுக்காடு வீதத்தில் கைத்தொலைபேசி (கைப்பேசி), ஐ–பாட், ஐ–போன், எல்.சி.டி திரைகள்/ எல்.இ.டி .திரைகள், டி.வி.டி.–க்கள் மற்றும் சி.டி.–க்கள் மற்றும் அவைகளின் பாகங்கள், துணைக்கருவிகள் மீது வரிவிதிக்கப்பட்டிருக்கிறது. ஐ–பாட் மற்றும் ஐ–போன் என்பவை முறையே எடுத்துச் செல்லத்தக்க மீடியா பிளேயர்கள் மற்றும் ஸ்மார்ட் போன் என்பதால், மேற்சொன்ன சட்டத்திற்குரிய முதலாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–C-யின் வரிசை எண் 13-A-ல் ஐ–பாட் மற்றும் ஐ–போன் தொடர்பான பதிவுகளை நீக்குவதென அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அவை எடுத்துச் செல்லத்தக்க மீடியா பிளேயர்கள் மற்றும் ஸ்மார்ட் போன்களுக்கு இணையாக மேற்சொன்ன சட்டத்திற்குரிய முதலாம் இணைப்புப் பட்டியலின் பகுதி–C-யின் வரிசை எண் 69–இன்படி வரிவிதிக்கத்தக்கதாகிறது.

**2.** மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் அளிக்கும் வகையில், மேற்சொன்ன தமிழ்நாடு சட்டம் 32/2006–ன் 86–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கையொன்று வெளியிடப்பட்டது. அந்தச் சட்டத்திற்குரிய மேற்சொன்ன சட்டத்தின் 86–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி சட்டமன்றப் பேரவையில் மேற்சொன்ன அறிவிக்கையை மாற்றுவதற்கு ஒரு சட்டமுன்வடிவினை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

**3.** இச்சட்டமுன்வடிவு, மேற்சொன்ன நோக்கத்திற்கு செயல்வடிவம் அளிக்க விழைகிறது.

**பி வி ரமணா,**
*வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

அ.மு.பி. ஜமாலுதீன்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.